## இரண்டாவது சுகாதாரத்துறை அபிவிருத்தி செயற்திட்டம் - 2015

இரண்டாவது சுகாதாரத்துறை அபிவிருத்தி செயற்திட்டத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒன்றிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கை மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் (ஐடிஏ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2013 ஆகஸ்ட் 19 ஆம் திகதிய 5228-எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சானது மாகாண மட்டத்தில் செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. ஊட்டச்சத்தின்மை மற்றும் தொற்றாத நோய்கள் என்பவற்றின் சவால்களிற்கு சிறந்த பதிலளிப்பதற்கு இயன்றதாக பொதுமக்கள் சுகாதாரத்தின் செயலாற்றலின் நியமங்களை தரமுயர்த்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாக உள்ளன. நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ஐ.அ.டொலர் 200 மில்லியனிற்கு சமமான எஸ்டிஆர் 129.8 மில்லியனாகும். செயற்திட்ட நடவடிக்கைகள் 2013 யூலை 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2018 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டியதாகப் பட்டியல்படுத்தப்பட்டிருந்தது.

### 1.3 ஒன்றிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கைக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த ஒன்றிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கிணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட ஒன்றிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையை தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த ஒன்றிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கை தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் ஒன்றிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கை பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. ஒன்றிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஒன்றிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் ஒன்றிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையினை தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் ஒன்றிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு

செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய ஒன்றிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையில் காட்டப்பட்ட செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) ஒன்றிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கை நிதிப் பிரமாணம் 150 மற்றும் உரிய மாகாண சபைகளின் பிரதம செயலாளர்களால் வழங்கப்பட்ட சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் என்பவற்றிக்கிணங்க தயாரிக்கப்பட்டனவா என்பதும்,

(எ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஏ) நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும்,

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட மாகாண சபைகளின் 2015 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்குகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் குறித்த மாகாண சபைகளின் பிரதம செயலாளர்களால் வழங்கப்பட்ட சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் என்பவற்றிக்கிணங்க தயாரிக்கப்பட்டு முன்வைக்கப்பட்டிருந்தன. மேற்படி ஒதுக்கீட்டுக் கணக்குகள் பொதுத் திறைசேரியின் பதிவேடுகள், வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகள் மற்றும் மாகாண சபைகளின் சுகாதார அமைச்சினால் பேணப்பட்ட புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் அறிக்கைகள் என்பவற்றுடன் இணங்கியிருந்தன. கடன் பெறுகைகளிருந்து ஏற்பட்ட கிரயங்கள்

மாகாண சபைகளின் சுகாதார அமைச்சின் 2015 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கில் முறையாக பதிவு செய்யப்பட்டிருந்தன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை சீராக்குவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஈ) நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் மற்றும் பௌதீகச் செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டிலும் 2015 திசெம்பர் 31 வரையிலுமான நிதிகளின் பயன்பாடு என்பற்றுடன் தொடர்புடைய சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| மூலம் | நிதியளிப்பு உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2015 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ. டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ. டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ. டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஐடிஏ | 200 | 26,000 | 3,215.00 | 23.54 | 3,061.30 | 36.00 | 4,680.20 |
| **மொத்தம்** | **200** | **26,000** | **3,215.00** | **23.54** | **3,061.30** | **36.00** | **4,680.20** |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

செயற்திட்டத்தின் ஒன்றிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையின் பிரகாரம், இலங்கை அரசாங்கத்தினால் பாதீட்டு மதிப்பீட்டின் ஊடாக மாகாண சுகாதார துறைக்காக மூலதன மற்றும் மீண்டெழும் செலவினங்களை மேற்கொள்வதற்காக ஒதுக்கப்பட்ட முறையே ரூபா 4,855.20 மில்லியன் மற்றும் ரூபா 47,966.14 மில்லியன் தேறிய நிதியேற்பாடுகளில் மூலதன மற்றும் மீண்டெழும் செலவினங்களிற்காக மேற்கொள்ளப்பட்ட முறையே ரூபா 2,068.37 மில்லியன் மற்றும் ரூபா 1,165.26 மில்லியன் நிதியேற்பாடுகள் அனைத்து ஒன்பது மாகாணங்களிலும் குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தது. சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களின் சுகாதார துறையின் அபிவிருத்திக்காக அவ் மாகாணங்களின் மாகாண சபைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட தேறிய நிதியேற்பாடுகளில் முறையே 12.5 சதவீதம் மற்றும் 8.4 சதவீத சேமிப்புக்கள் அறிக்கையிடப்பட்டிருந்தமை தொடர்ந்தும் அவதானிக்கப்பட்டது. மேலும், மத்திய மாகாணத்தின் சுகாதாரத் துறைக்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாடுகளில் 7.7 சதவீத தேறிய சேமிப்பொன்று பதிவுசெய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்கான ஏனைய 06 மாகாணங்களின் சுகாதார துறைக்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாடுகள் மீது 6 சதவீதத்திற்கும் குறைவான தேறிய சேமிப்பொன்று பதிவு செய்யப்பட்டிருந்தது.

**3.2 பௌதீக செயன்முன்னேற்றம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) செயற்திட்டத்தின் செயன்முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாண மட்டத்தில் முகாமை செய்யப்படும் 525 பிரதேச மருத்துவமனைகளில் 262 மருத்துவமனைகளிலிருந்து e – IMMR முறைமையின் ஊடாக சுகாதார தகவல்களைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்பட்டிருந்தது. அதனால், மீளாய்வாண்டினுள் 265 பிரதேச மருத்துவமனைகள் e – IMMR முறைமையின் ஊடாக மாற்றமுடியாத தகவல்கள் முன்வைக்கப்பட்டிருந்ததுடன் மாகாண மட்டத்தில் அது திருப்திகரமாக காணப்பட்டது. எவ்வாறாயினும், பின்வரும் மாவட்டங்களில் பின்னடைந்த பிரதேசங்களின் பிரதேச மருத்துவமனைகளிலிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்வதில் மந்தமான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது.

| மாவட்டம் | மாவட்டத்திலுள்ள பிரதேச மருத்துவமனைகளின் எண்ணிக்கை | e-IMMR முறைமையினூடாக தகவல் அனுப்பும் பிரதேச மருத்துவமனைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| நுவரெலியா | 26 | 11 |
| மட்டக்களப்பு | 20 | 07 |
| கல்முனை | 14 | 06 |
| குருணாகலை | 46 | 11 |
| இரத்தினபுரி | 38 | 08 |
| காலி | 21 | 09 |
| அம்பாந்தோட்டை | 20 | 09 |

உரிய நோக்கத்திற்காக பயிற்றுவிக்கப்பட்ட பதவியணியில் பற்றாக்குறை காரணமாக e – IMMR முறைமையினூடாக சுகாதார தகவல்களை அனுப்பும் இலக்கினை அடைய முடியாதிருந்ததாக மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களின் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்களால் விளக்கமளிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பணவளிப்பு இணைப்புக் குறிகாட்டி - 05 இன் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 3,841 தாய் மற்றும் சேய் மருத்துவ சிகிச்சை நிலையங்களில் (எம்சிஎச்) 2440 நிலையங்களுக்காக உபகரணங்கள் மற்றும் ஏனைய வசதிகளை வழங்கியமையூடாக கர்ப்பிணித் தாய்மார் மற்றும் 5 வயதிற்கு குறைந்த சிறுவர்களுக்கான பாதுகாப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள அவ்வாறான 102 தாய் மற்றும் சேய் சுகாதார சிகிச்சை நிலையங்களில் 21 நிலையங்களுக்கு மாத்திரம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேவையான உபகரணங்கள் மற்றும் ஏனைய வசதிகள் வழங்கப்பட்டிருந்தன. மேலும், மட்டக்களப்பு, கல்முனை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களிலுள்ள பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தொகுதிகளில் தாய் மற்றும் சேய் சுகாதார சிகிச்சை நிலையங்களுக்கு அவ்வாறான வசதிகளை வழங்குவதற்கு 50 சதவீதம் முதல் 56 சதவீதம் வரையான வீச்சில் மந்தமான செயன்முன்னேற்றமொன்று பதிவு செய்யப்பட்டிருந்தது.

(இ) பணவளிப்பு இணைப்புக் குறிகாட்டி 06 இன் பிரகாரம், செயற்திட்டக் காலப்பகுதியினுள் சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அதிகார எல்லையின் கீழ் ஒவ்வொரு பிரதேசத்திலும் ஆகக் குறைந்தது 02 சுகாதாரமான வாழ்க்கை முறை நிலையங்களையேனும் ஸ்தாபிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. ஆகையால் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 165 சுகாதாரமான வாழ்க்கை முறை நிலையங்கள் ஸ்தாபிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. மீளாய்வாண்டிற்கான ஒட்டுமொத்த

இலக்குகள் அடையப்பட்டிருந்ததுடன், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 212 சுகாதாரமான வாழ்க்கைமுறை நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும், இது தொடர்பில் சில மாவட்டங்களில் திருப்திகரமான செயன்முன்னேற்றம் தென்பட்டிருக்கவில்லை. இதனால் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு குருணாகலை மற்றும் புத்தளம் மாவட்டங்களில் ஸ்தாபிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட முறையே 28 மற்றும் 08 சுகாதாரமான வாழ்க்கை முறை நிலையங்களில் முறையே 07 மற்றும் 03 சுகாதாரமான வாழ்க்கை முறை நிலையங்கள் மாத்திரம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. மேலும், பதுளை மாவட்டத்தில் ஸ்தாபிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த 16 சுகாதாரமான வாழ்க்கை முறை நிலையங்களில் 04 நிலையங்கள் மாத்திரம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன.

(ஈ) 40 வயதிற்கும் அதிகமான நபர்களுக்கான நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் மற்றும் புற்றுநோய் போன்றவற்றுக்கான மருத்துவ பிரிசோதனைகளை நடாத்தும் சுகாதாரமான வாழ்க்கை முறை நிலையங்களின் தரத்தினை முன்னேற்றுதல் மற்றும் தொற்றாத நோய்களை கட்டுப்படுத்துதல் என்பவற்றிற்கான நிதிகளை செயற்திட்டம் ஒதுக்கீடு செய்திருந்தது. களுத்துறை மாவட்டத்தின் மாவட்ட மருத்துவ உத்தியோகத்தர்களின் அலுவலகங்களினால் நடாத்திச் செல்லப்படும் சுகாதாரமான வாழ்க்கை முறை நிலையங்களுக்கு வருகைதரும் நோயாளிகள் தொடர்பில் போதியளவான தரவுகள் பேணப்படாதிருந்தமை கணக்காய்வுப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்டது. சப்ரகமுவ மாகாணத்தினுள் தொற்றாத நோய்களை கட்டுப்படுத்துவதற்கான சிகிச்சை நிலையங்கள் நடாத்தப்பட்டிராததுடன், சப்ரகமுவ மாகாணத்தின் மாவட்ட மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகங்களில் நடாத்தப்பட்டிருந்த கர்பிணித்தாய்மாருக்கான சிகிச்சை நிலையங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட தகவல்களுடன் செயற்திட்டத்தின் சுகாதாரமான வாழ்க்கை முறை நிலையங்களின் நடவடிக்கைகளின் செயன்முன்னேற்றம் உள்ளடக்கப்பட்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(உ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாத்தறை, நுவரெலியா, இரத்திபுரி, அநுராதபுரம், யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் கல்முனை ஆகிய மாவட்டங்களின் மாகாண மருத்துவமனைகளில் மகப்பேற்று மருத்தவரொருவரின் அறிவுரையின் கீழ் விரிவாக்ககப்பட்ட அவசர தாய் மற்றும் பிரசவ பாதுகாப்பு வசதிகள் வழங்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. வலஸ்முல்ல, திஸ்ஸமஹாறாம, திக்ஓய, ரிகல்லகஸ்கட மற்றும் தியதலாவ மாகாண மருத்துவமனைகளில் 2014 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்த விரிவுபடுத்தப்பட்ட அவசர தாய் மற்றும் பிரசவ பாதுகாப்பு வசதிகள் தொடர்பான சேவைகள் மகப்பேற்று மருத்துவர்களின் பற்றாக்குறையால் 2015 ஆண்டின் போது தொடரமுடியாது போயிருந்தது.

(ஊ) பணவளிப்பற்ற இணைப்புக் குறிகாட்டி - 06 இன் பிரகாரம், தொற்றாத நோய்களுக்காக போதியளவான பாதுகாப்பு மருந்து இருப்புக்களை பேணுவதற்காக 266 ஆரம்ப சுகாதார பாதுகாப்பு நிறுவனங்களுக்கு வசதிகள் அளிக்கப்பட வேண்டும். செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 529 ஆரம்ப சுகாதார பாதுகாப்பு நிறுவனங்களுக்கு அவ்வாறான பாதுகாப்பு மருந்துப் பொருள் இருப்புக்களை பேணுவதற்கான வசதிகள் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அநுராதபுரம் மாவட்டத்தில் 55 ஆரம்ப சுகாதார பாதுகாப்பு நிறுவனங்கள் பாதுகாப்பான மருந்துப் பொருள் இருப்பினை பேணியிராததுடன், மாத்தறை மாவட்டத்தில் 24 ஆரம்ப சுகாதார பாதுகாப்பு நிறுவனங்களில் 04 நிறுவனங்கள் மாத்திரம் அவ்வாறான பாதுகாப்பான மருந்துப்பொருள் இருப்பினை பேணியிருந்தது.

(எ) உரிய மருந்துப் பொருட்களின் காலாவதியாகும் திகதியை இலகுவாக இனங்காண முடியாதவகையில் களஞ்சியத்தில் மருந்துப் பொருட்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்காமை மாகாண வைத்தியசாலைகளில் மருந்துப்பொருள் களஞ்சிய முகாமைத்துவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விபரமான கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அதனால், வடமேல் மாகாணத்திலுள்ள அளவ்வ, தம்பதெனிய, வாரியபொல, கல்கமுவ மற்றும் கல்பிட்டி மாகாண வைத்தியசாலைகள் சப்ரகமுவ மாகாணத்திலுள்ள உடுகொட மாகாண வைத்தியசாலை மற்றும் இரத்தினபுரி மருந்து வழங்கல் பிரிவு மற்றும் அநுராதபுர மாவட்டத்திலுள்ள நொச்சியாகம, மதவாச்சி, ராஜாங்கனை, நேகம்பஹா, கெக்கிராவை மாகாண வைத்தியசாலைகள், கெபித்திகொல்லாவ ஆரம்ப மருத்துவ சிகிச்சை பிரிவு மற்றும் தலாவ மற்றும் கவ்நேவ சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகங்கள் என்பவற்றில் காலாவதியான மருந்துப் பொருட்கள் மற்றும் தரம் குறைந்த மருந்துப் பொருட்களை விநியோகிக்கும் அபாயங்கள் நிலவுகின்றமை அவதானிக்கப்பட்டது. மேலும், அநுராதபுரம் மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களிலுள்ள 05 பிராந்திய மருத்துவமனைகளில் மருந்துப் பொருட்களின் பற்றாக்குறை மற்றும் மிகைகள் அவதானிக்கப்பட்டது.

## 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) 2015 ஆம் ஆண்டிற்கான அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இனங்காணப்பட்ட செயற்பாடுகளுக்காக மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கங்கள் சில சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்பட்டிராமை கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு அவதானிக்கப்பட்டது.

(i) சுகாதார முறைமை மற்றும் தாய் மற்றும் சேய் சுகாதாரம் மற்றும் போசனையின் மேம்படுத்தலின் கீழ் ரூபா 15.66 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த 03 நிகழ்ச்சித்திட்டங்கள் மேல் மாகாணத்தின் மாகாண சுகாதார அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. எவ்வாறெனினும், 2015 ஆம் ஆண்டிற்கான அபிவிருத்தித் திட்டத்தில் உள்ளக்கப்பட்டிராத ஏனைய 09 நிகழ்ச்சித்திட்டங்கள் ரூபா 10.44 மில்லியன் கிரயத்தில் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

(ii) வடக்கு மாகாண பிராந்திய சுகாதார அமைச்சினால் பேணப்பட்டுவரும் பதிவேடுகளின் பிரகாரம், செயற்திட்டத்தால் ஒதுக்கப்பட்ட நிதிகளின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்கள் மற்றும் உபகரண பொருட்களில் சில வேலணை மற்றும் கோப்பாய் மாவட்ட மருத்துவமனைகளுக்கு கையளிக்கப்பட்டிருந்தன. எவ்வாறெனினும், உரிய தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் மருத்துவமனைகளினால் பெற்றுக்கொள்ளப்பட்டிராமை 2016 மார்ச் மாதம் கணக்காய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்ட பௌதீக தளப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

## 3.4 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

வேலணை மற்றும் மன்னார் மாவட்ட மருத்துவமனைகளுக்கு கையளிக்கப்பட்ட 08 உபகரண பொருட்கள் மற்றும் 29 தளபாட பொருட்கள் உத்தேசிக்கப்பட்ட செயற்பாடுகளுக்காக பகிர்ந்தளிக்கப்படாமல் 05 மாதங்களுக்கு மேற்பட்ட காலமாக பயன்படுத்தப்படாது பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரால் தக்கவைக்கப்பட்டிருந்தமை கணக்காய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்ட பௌதீக தளப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. மேலும், ரூபா 1.03 மில்லியன் கிரயத்திற்கு பழுதுபார்க்கப்பட்ட கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவு ((ICU) 2015 யூலை மாதம் முதல் 2016 ஏப்ரல் 30 வரையான காலம் குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டது.

## 3.5 சர்ச்சைக்குரிய தன்மையிலான விடயங்கள்

மன்னார் ஆதார வைத்தியசாலையின் சுகாதார உடற்பயிற்சி நிலையத்தின் பழுதுபார்த்தல் பணிகள் வேலைத்திட்டத்தின் பிரகாரம் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வு உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட தளப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. எவ்வாறெனினும், பழுதுபார்த்தல் வேலைகளுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 1.43 மில்லியன் தொகை 2015 திசெம்பர் 08 ஆந் திகதி ஒப்பந்தகாரருக்கு விடுவிக்கப்பட்டிருந்தது.